மாதர்மனோரஞ்சினி.

VOL. 1.	DECEMBER, 1899.	NO. 10.
புத்த. க.	சென்னை, 1899-ஹு டிசம்பர்-மீ.	இல. க0.

விக்டோரியா மகாராணியார் குடும்ப விஷயத்தில் கவனிப்பது.

சாதாரணமாய் உயர்ந்த ஸ்திதியிலுள்ள மாதர்கள் குடும்ப சம்ரக்ஷணை விஷயங்களில் கவனியாமலிருப்பதுண்டு. கல்வி, ஞானம் இவைகளிருக்கிற சிலர் குடும்ப சம்ரக்ஷணை விஷயங்களிலும் கவனித்து வருகிறார்கள். இவைகளில்லாதவர்களோ கர்வங்கொண்டு கவனியாமலிருக்கிறார்கள். ஆனால் நமது தேசத்தை ஆண்டுவரும் விக்டோரியா மகா ராணியார் குடும்ப சம்ரக்ஷணை விஷயத்தில் அதிகமாக கவனித்துவருகிறார். ஐரோப்பாகண்டத்திலுள்ள பிரபுக்களைப் பார்க்கிலும் பலவிதவேலைகளால் ஒழிவில்லாமல் தமது ராஜ்ஜியகாரியத்தை சரிவரசெய்து வருகிற மகா ராணியார் சற்று அவகாசம் செய்துகொண்டு, வீட்டுவேலைகளின் பொருட்டு செய்ய வேண்டிய விஷயங்களுக்குத் தானே உத்தரவுகள் செய்து வருகிறாராம். நாள்தோறும் அதிகாலையில் எழுந்தவுடன் தமதுபேரப்பிள்ளைகளுக்கும் தமக்கும் வேண்டிய உணவுகளை தயார் செய்துவைக்கும்படி வேலைக்காரர்களுக்கு கட்டளை இடுவார். இப்போசன பதார்த்தங்களெல்லாம் ஒரு புத்தகத்தில் எழுதப்படும். மகாராணியவர்களின் தலைமை சமையற்காரனுக்கு வருட சம்பளம் 7000 ரூபா. இவனுக்கு பரிசாரகர்களும், கீழ்சமையற்காரர்களும் அநேகர் உண்டு. உணவு பதார்த்தங்கள் மகாராணியாரின் உத்திரவுப்படி செய்யப்படும். மகா ராணியாரின் உத்திரவில்லாமல் அவரது செல்வ நாய்களுக்குக்கூட பரிசாரகர்கள் தங்களிஷ்டப்படி ஆகாரங்களைக் கொடுக்கக்கூடாதாம். லண்டன் நகரத்திலுள்ள பெரிய வர்த்தகர்கள் தங்கள் தொழில்களை எவ்விதம் நடத்திவருகிறார்களோ அவ்விதமே இவரும் தமது வேலைகளைசரிவர நடத்தி வருவாராம். இங்கிலாந்து தேசத்தில் பூர்வீக அரசர்கள் காலங்களில் அரண்மனையில் சமையல் முதலிய விஷயங்களில் சரியான ஏற்பாடுகள் ஒன்றும் இல்லையாம். ஆனால் மகாராணியாரவர்களும், காலம் சென்ற இவரது கணவரும் வீண் செலவுகளைக் குறைத்து சாப்பாட்டுக்கு

வேண்டிய தொகையை ஏற்படுத்தினர்களாம். இதனாலேயே மகாராணியவர்கள் இப்பொழுதும்கூட அக்காலத்தில் ஏற்படுத்திய குறைந்த தொகையைக்கொண்டே பெரிதான தமது குடும்பத்தை நடத்திவருகிறார். செல்வ பாக்கியமுள்ள நமது மாதர்களும் மகாராணியாரைப்போல நடந்துகொள்ள முயல்வது நலமேயாம்.

மகாராணியாரின் இளம்பருவத்தைப்பற்றிய கதை.

மகாராணியார் பால்ய வயதுள்ளவராயிருந்தபொழுது இவரது உருவம் எடுக்கப்பட்டது. (அதாவது பொட்டோகிறுப் Photograph) அப்பொழுது மகாராணியார் டம்பமான உடைகளைதரித்துக் கொள்ளாமல் சாதாரண கறுப்புப்பட்டை மாத்திரம் தரித்துக்கொண்டும், யாதொரு நகைகளையும் அணியாமலும் உருவம் எடுத்துக்கொண்டார். உருவம் எடுத்துக்கொள்வதற்கு முன் சமீபத்தில் இருந்த சில பெரிய மனிதர்கள் அம்மா விலையுயர்ந்த சில ஆபரணங்களை தரித்துக்கொண்டு உருவம் எடுத்துக்கொண்டால் அழகாயிருக்கும் என்று சொன்னார்கள். அப்பொழுது மகாராணியார் "நகைகள் எனக்கு வேண்டாம்; ஏனெனில் இந்த உருவத்தை என் அருமையான பிரஜைகள் யாவர்களும் பார்ப்பார்கள். அப்பொழுது என் பிரஜைகள் வீண்செலவு செய்வதை இது தடுக்கும், இந்த எண்ணம் என் மனதிலிருக்கிறது" என பதில் சொன்னார்.

குழந்தைகளை பழக்கும் முறை.

குழந்தைகளை நல்ல நடக்கையிலே நடத்திவரவேண்டும். இல்லாவிட்டால் தாய் தந்தையர்களுடைய அஜாக்கிரதையினால் பிள்ளைகள் கெட்டுப்போவதுயாவருக்கும்தெரியும். குழந்தைப் பருவத்திலேயே நல்ல வார்த்தைகளை அவர்களுடன் பேசிவரவேண்டும். மேலும் அடிக்கடி தின்பண்டங்களைப் புசிக்கக்கொடாமல் காலையிலாவது சாயங்காலமாவது ஒரு முறை அல்லது இரண்டு முறை தான் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு கூடுமானவரையில் நல்ல உடுப்புகளை தரித்துக்கொள்ள கொடுக்கவேண்டும். இவைகளை ஒரு நாளைக்கு இரண்டு தடவை மாற்றுவது நலம். * பெருந்தன்மை, மரியாதை, தேசாபிமானம் முதலியவைகளை கற்பிக்கவேண்டும். ஒரு தடவை அல்லது இரண்டு தடவை கேட்காவிட்டால் அதட்டவேண்டுமே

தவிர கண்டபடி பிரம்பினாலும், விசிறியினாலும் அடிக்கக்கூடாது. கோபம்வந்தால் அடக்கிக்கொண்டு குழந்தைகளை சாந்தமாய் நல்ல வழியில் நடக்க என்னென்ன கற்பிக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் போதிக்க வேண்டும். இவைகளுக்கு குழந்தைகளைப் பழக்கும் முறை எனப்பெயர். இவ்விஷயத்தைக் குறித்து சென்னையில் அநகாரிக எச் ஸ்ரீதர்மபாலர் ஓர் பிரசங்கம் செய்தார். இது பிள்ளைகளை வளர்க்கும் தாய்மார்களுக்கு முக்கியமானதென்று இங்கிலீஷிலுள்ளதை மொழிபெயர்த்து பிரசுரிக்கிறோம்.

ஜெப்பான் தேசத்தில் தாய்மார்கள் நாள் தோறும் காலையில் எழுந்து ஸ்நானம்செய்து, நல்ல உடைகளை உடுத்துக்கொண்டு தங்கள் குழந்தைகளையும் எழுப்பி, குளிப்பாட்டி நல்ல உடைகளை தரித்துபெருந்தன்மை, தேசாபிமானம், மரியாதை முதலியவைகளை போதிப்பார்கள். மேலும், ஜெப்பானிய மாதர்கள் குழந்தைகள் உண்மையை எப்போதும் பேசவேண்டுமென்றும் பொய் எப்போதும் சொல்லக்கூடாதென்றும் சிறிய கதைகளைச் சொல்லி கற்பித்து வருவார்கள். பௌத்தமதத்தை நிலை நாட்டிய கௌதமசாக்கியருக்கு ரகுல என்ற புத்திரனிருந்தான். ஒரு நாள் தமது புத்திரனிடத்திற்குச் சென்று சுத்தமுள்ள ஒரு பாத்திரத்தில் தெளிந்த தண்ணீரை நிரப்பி குழந்தையைஇந்த தண்ணீர் எப்படியிருக்கிறதென்று கேட்க, அதற்கு புத்திசாலியான அவர் புத்திரன் அப்பா! "அது தெளிவாயிருக்கிறது" என்றான். தகப்பனார் மறுபடியும், வேறொரு பாத்திரத்தில் தண்ணீரைவிட்டு அதில் கொஞ்சம் மணலைக்கலந்து என் பிரியமுள்ள ரகுலா இப்பொழுது எப்படியிருக்கிறது என்று கேட்க, அவன் சற்று யோசித்து அப்பா "இது கலங்கியிருக்கிறது" என பதில் சொன்னான். உடனே தகப்பனார் சந்தோஷித்து தமது குமாரனைப் பார்த்து பின் வருமாறு போதித்தார். "அப்பா! என்கண்மணியே! உன் மனதை ஜலமாக நினைத்துக்கொள்; பொய் என்னும் மணல் ஜலத்தில்விழுந்தால் எப்படி "சுத்தமான ஜலம் கலங்கியிருக்கிறதோ" அப்படி மனது கலங்கிப்போம். உன்னை ஒருவரும் விரும்பமாட்டார்கள்; மண் சேராத சுத்தஜலம், எப்படியிருக்கிறதோ அப்படி பொய் சொல்லாமலிருந்தால் உன்னுடைய மனது சுத்தமாயிருக்கும். யாவரும் உன்னை விரும்புவார்கள்" என்று போதித்ததாக கூறுவதால் அத்தேசத்து குழந்தைகள் சிறு வயதிலேயே இவைகளைக் கேட்பதினாலும், இம்மாதிரியே நடப்பதாலும் மனதில் இவைகள் நன்றாக பதிந்து விடுகின்றன. இவர்கள் பெரியவர்களானபின்பும் பெருமையையடைகின்றார்கள்.

அமெரிக்கா தேசத்திலும் தாய்மார்கள் தங்கள் அருமையான குழந்தைகளுக்கும் *பெருந்தன்மையை போதிப்பதுடன் தாங்களும் அப்படி நடந்து காட்டுகிறார்கள்; எப்படியெனில் தங்கள் குழந்தைகளுக்கு அழகான

* பெருந்தன்மை என்றால் ஒருவன் தன்னை உயர்ந்தவனாகவும் இதரர்களை தாழ்ந்தவர்களாகவும் எண்ணாமல் தன்னைப்போல சமமாக நினைப்பது.

உடுப்பு கொடுத்தால் தங்கள் வேலைக்காரனுக்கும் அழகான உடுப்பு கொடுப்பார்கள். எஜமானன் வண்டியில் வெளியேபோகும்பொழுது வேலைக்காரன் உள்புறத்தில் உட்கார்ந்து செல்லுவது வழக்கம். நமது தேசத்திலோ எஜமான் வண்டியில் சவாரிசெய்யும்பொழுது வேலைக்காரன் பின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாவது அல்லது வண்டி முன் ஓடிக்கொண்டாவதுபோவதை பெரிய உத்தியோகஸ்தர்களிடம் காணலாம். ஆகாரவிஷயத்திலும் தாங்கள் சாப்பிடுகிற போசனத்தையே வேலைக்காரர்களுக்கும் கொடுப்பார்கள்.

நம்மவர்கள் வேலைக்காரனுக்கு பழையதும் ஒரு மிளகாயும் கொடுப்பார்கள்; மேலும் அதிக இழிவாகவும் நடத்துவார்கள். இது மிகவும் கெட்ட வழக்கம். "தன்னைப்போல் மற்றவர்களையும் எண்ணவேண்டும்" என்னும் மேலானகொள்கை அமெரிக்கர்களிடமுண்டு. நம்மவர்களுடைய பிள்ளைகள் கெட்டவார்த்தைகளைச் சொன்னால் தாய்மார்கள் சந்தோஷப்படுவது உண்டு. இதுவும் பிசகு. உடனே அவர்களை கண்டித்து இனி அவ்வித வார்த்தைகளைச் சொல்லவொட்டாமல் செய்ய வேண்டும். இல்லாவிடின் குழந்தைகள் பெரியவர்களானபோது கெட்டவர்களாகக்கூடும். பிள்ளைகளுக்கு அறிவு புகட்டவேண்டியது தாய்மார்களின் கடமை. ஆகையினால் பெண்களுக்குக் கல்விவேண்டியது அவசியம்.

2ம் - அதிகாரம்

அன்னபூரணிகதை.

ஆண்டிச்சியம்மாள் சரித்திரம் தொடர்ச்சி.

இப்படியே மூன்று வருஷங்களாயின. ஒருநாள் காலையில் முத்துசுவாமிப்பிள்ளை தம்வழக்கப்படி வைகையாற்றோரமாய்ச் சிறிது நேரம் உலாவிவிட்டு வீட்டுக்குத்திரும்பும்போது நதியோரமாயிருக்கும் அடர்ந்த ஓர் காட்டின்வழியே வந்தார். அந்தக்காட்டில் அநேகம் விருட்சங்களும் பல விதபுஷ்பங்களைப் புஷ்பிக்கும் ஏராளமான செடிகளுமிருந்தன. குயில், கிளிமுதலிய பட்சிகள் தங்கள் அழகான சிறகுகளை அடித்துக்கொண்டு காதிற்கின்பமாய்ப்பாடிக்கொண்டு மிருந்தன. அங்கே புஷ்பித்திருக்கும் அழகியபுஷ்பங்களிலிருந்தெழும்பும் சுகந்தவாசனை அக்காடுமுழுதும் நிரம்பிற்று. அங்குள்ளபசும்புற்றரைகளில் பசுக்களும், அவற்றோரமாய் கன்றுகளும் அமைதியாய்ப்பரவி நின்று செழிய பசும்புற்களை மேய்ந்து கொண்டிருந்

தன. அக்காட்டைச்சுற்றி மதில்போலும் வளர்ந்த பெரியமரங்கள் சூரியனுடைய அழகானகதிர்கள் அதிகாலையில் அப்பூக்கள்மேல்வீசவொட்டாது மறைத்துக்கொண்டிருந்தன. முத்துசுவாமிப்பிள்ளை அக்காட்டில் உட்புகுந்த சமயத்தில் சூரிய கிரணங்கள் தங்களை மறைத்து நின்றமரங்களின்மேலெழும்பி அப்பூக்களை எட்டிப்பார்ப்பதுபோலவும், எட்டிப்பார்த்த அக்கிரணங்களுக்கு முத்தந்தரும்படி அப்புஷ்பங்கள் எழும்பி நிற்பது போலவும் அச்சமயம் முத்துசுவாமிப்பிள்ளை திடீரென்று போய்விட்டபடியால் அவைகள் நாணி நிற்பது போலவுந்தோன்றின. அவர் சந்தோஷகரமான இக்காட்சிகளைப் பார்த்து, அகமகிழ்ந்தவராய்ச்சிறிது தூரமுட்செல்ல அக்காட்டினூடே ஓடிக்கொண்டிருக்கும் பளிங்குக்குச் சமானமான தண்ணீரை உடைய ஒருநீரோடையையும் அதின் இருகரையிலும் மிகுதியாய்ப் புஷ்பித்திருக்கும் செடி கொடிகளையும் பார்த்து கடவுளின் ஆச்சரியகரமான சிருஷ்டிப்புகளைச் சிந்தித்தவராய் இன்னும் சிறிது தூரம் சென்றார். அங்கு தமக்கெதிரில் ஒரு காட்டு ரோசாச்செடி வெகு அழகாய்ப் புஷ்பித்திருந்ததைக் கண்டு அதன் சமீபத்திற் போய்ப் பலபருவங்களையுடைய அநேக மலர்களை அதிற் கண்டு கவனித்தார். அவைகளில் சில சில அரும்புகளாகவும் சிற்சில மொட்டுகளாகவும், சிற்சில தங்கள் இதழ்களிலொருபாகத்தை வெளியிற்காட்டி மீதியைமறைத்துக்கொள்வது போலவும், சிற்சில இதழ்களெல்லாம் விரித்து சூரியகிரணங்களதன்மேற் படிவதைச் சந்தோஷத்துடன் பெற்று நிமிர்ந்து நிற்பது போலவும், சில புஷ்பித்து சில நாட் சென்றனபோலவும், சில அதிகவயசாய் வாடிவதங்கின தம்மிதழ்களை ஒன்றொன்றாய் இழக்கக் கொடுத்தன போலவும் தோன்றின. முத்துசுவாமிப்பிள்ளை சற்றுநேரம் கவனித்துப்பார்த்து இக்கானமுஞ் செடிகளும், பூக்களும், மனுஷஜீவியத்தின் உண்மையைப்போதிக்கிற உபாத்தியாயர்களாக இருக்கின்றன. இச்செடியில் பூத்துள்ள பழம்பூக்களுக்கு நான் சமம் ஆவேன். என்மனைவி இதில் விரிந்திருக்கிற புது மலர்களுக்கும்—என் அருமை மகள் சிறு மொக்குகளுக்கும் சமம் என்னலாம்: இம்மொட்டுகள் சூரிய ரஸ்மியை அடைந்தும் அதின்பயனை நுகராதுசூரிய பிரபையைப் பெறுமுன்னர் எவ்வாறிருந்ததோ அவ்வாறே இருக்கின்றன. மலருந்தருணத்து மலர்களோ சூரியகிரணங்களைக் கண்டவுடன் சந்தோஷமாயெழுந்து ஆவலோடு அக்கிரணங்களை ஆலிங்கனஞ் செய்து அவற்றோடு கொஞ்சி மகிழ்வன போலவிளங்குகின்றன. இப்பழம் பூக்களோ இளமையில் உலக இன்பங்களைச்சுகித்துப்பின்னர் தளர்ந்து மூப்படைந்த ஒருவரைப் போலவும் பொலிவு இழந்து காணப்படுகின்றன. என்றிங்ஙனம் தன்னோடு தனிச் சம்சாஷணை செய்தவராய் வெவ்வேறு பக்குவமான பலபூக்களைப் பறித்து

ஜேப்பில் போட்டுக்கொண்டு தன் வீடு வந்து மேல் மாடியிற் போய் உட்கார்ந்திருக்க அச்சமயம் அவர் மனைவியும் அங்கே வந்து அன்பாயுரையாட இவர் புதிதாய் மலர்ந்திருந்த ஒரு அழகானபூவை அவள் கையிற் கொடுத்து என் அன்பான மனைவியே! நீ யிந்த புஷ்பத்தைப் போல் எனக்கு மிகுந்த வாசனையாயும் மனோரஞ்சிதமாயு மிருக்கிறுயென்று சொல்லிப்பின்னர் வாடியிருந்த மற்றொரு புஷ்பத்தை யெடுத்து மனுஷ ஜீவியம் இப்பூக்களுக்குச் சமானமானது; உன்கையிலிருக்கும் புஷ்பம் எவ்வளவோ வாசனையும் அழகுமுள்ளது, இந்த மலரோ மணங்குறைந்து பொலிவு குன்றி வாடிப் போயிற்று; இன்னும் இரண்டொரு நாளில் ஒன்றுக்கும் உதவாமற்போகும். இதுபோலவே நாமுமிருக்கிறோம். இன்று சுகஜீவிகளாயும் தேகலாவணிய முடையவர்களாயு மிருக்கிறவர்கள் இன்னும் கொஞ்சக்காலத்தில் இப்பூவைப் போல வாடிவதங்கி கடைசியாய் மரித்துப்போக நேரிடும், "முத்தியிருந்த கனி யொழியத் தீவளியால் நற்காப்புதிர்தலுமுண்டு" என்றாற்போல அரும்புகளும், மொட்டுகளும், அநேகந்தடவைகளிற் பல காரணங்களால் வலி இழந்து இதழ்கள் விரிந்து மலரும் பருவத்தின் முன்னரே வாடி உதிர்ந்துபோகிறதைக் காண்கிறோம். அதுபோலவே சிறு பிள்ளைகளும், வாலிபரும் மரித்துப் போகிறார்கள் என்று சொல்ல, தாயம்மாள்" காலையில் நாம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் நிறைந்த வீட்டில் இப்படிப்பட்ட கெட்டவார்த்தைகளை யேன் பேசுகிறீர்கள்? யெல்லாரும் சாகவேண்டியதுதான். அது உங்களுக்குத் தானுதெரியும்? அதை ஏன் இப்போது சொல்லிக் கொள்ளவேண்டும்?" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் ரோசம்மாள் ஒரு தாம்பாளத்தில் சில பலகாரங்களை வைத்துக்கொண்டு தன் தகப்பனாரிடம்போய் "ஐயா, என் பொம்மைகளுக்கின்று கலியாணம், நீங்கள் விருந்து சாப்பிடுங்கள்" என்று தாம்பாளத்தை நீட்டவும் அவர் மகளைத் தூக்கி மடியில் வைத்து முத்தமிட்டு இரண்டொரு பலகாரங்களை யெடுத்து அன்பாய் உண்டார். ரோசம்பாள் தகப்பனார் மடியிலிருந்து இறங்கித் தாம்பாளத்தைத் தாயாரிடங்கொடுக்கத் தாய் ஆலிங்கனம் செய்து அன்பாயொரு முத்தமிட்டு "என் தங்கமே நீ கொண்டுவந்த பட்சணங்கள் மிக நேர்த்தியாயிருக்கிறது உன் பொம்மைகள் இரண்டும் சிரஞ்சீவி களாய் வாழக்கடவை" என்று வாழ்த்தினுள். அந்த சமயத்தில் முத்துசுவாமி பிள்ளை தன் மனைவியைப்பார்த்து "தாயி, ரோசம்மாளை சோளவந்தானுக் கனுப்பும்படி மாப்பிள்ளை வீட்டிலிருந்து நேற்று கடிதம் வந்ததே அனுப்பவேண்டாமா." என்று கேட்க, தாயம்மாள் ரோசம்மாளைக் கையிலணைத்து மறுபடியும் முத்திகொடுத்து "என் கண்மணியை அனுப்பிவிட்டு நானெப்படி தனித்திருக்கக்கூடும்?" என்று சொல்

லிவிட்டு "தங்கம்! நீ சோளவந்தானுக்குப் போகிறாயா" என்று கேட்க, ரோசம்மாள் "நான் அங்கே போகமாட்டேன், வேணுமானால் நீங்கள் போங்கள், அங்கே விளையாடப்பிள்ளைகளில்லை" என்று சொல்லிவிட்டுப் பொம்மைகள் வைத்திருந்த இடத்திற்கு ஓடிப்போய்விட்டாள். இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வேலைக்காரனொருவன் ஒரு சிவப்புக் கடித உறையைக்கொண்டு வந்து "ஐயா ஒரு தந்திவந்திருக்கிறது கையெழுத்து வைக்கும்படி உத்திரவாக வேண்டும்" என்று சொல்ல முத்துசுவாமிப் பிள்ளை திடுக்கிட்டெழுந்திருந்து கையெழுத்துப் போட்டுவிட்டு உறையைப் பிரித்துப்பார்த்து 'ஐயோ மகளே' என்று சொல்லி மறுவார்த்தை சொல்ல முடியாமல் அடியற்றமரம்போல் கீழே விழுந்தார். பக்கத்தில் நின்ற அவர் மனைவி, தட்டுக்கெட்டு தடுமாறி அவரை வாரியெடுத்து பன்னீர் தெளித்து மூர்ச்சை தெளிந்ததும் கணவரைப்பார்த்து என் மகளிங்கே சுகமாயிருக்கிறாளே சங்கதி என்னவென்று வாய் பதறிக்கேட்க அவருக்கு நாவெழும்பாமல் "ராசப்பன், வாந்திபேதி" என்று வாய்குளறிச் சொல்லி மறுபடியும் மூர்ச்சை போய்விட்டார். இதைக்கேட்கவும் தாயம்மாள் ஐயோ! வென்று சொன்னதும் அவளும் சோர்ந்து மூர்ச்சித்தாள், வேலைக்காரர் ஓடிவந்து மூர்ச்சைபோன தங்கள் எஜமானன் எஜமாட்டி முகத்தில் பன்னீர்தெளித்துச் சயித்தியோபசாரஞ் செய்து வேண்டிய சிகிச்சைகளுஞ் செய்ய அவர்களுக்கு நினைவு வந்து எழுந்திருந்து மிகுந்த விசனத்தோடு உட்கார்ந்து கொஞ்சநேரம் இருக்கிறதற்குள்ளாக பிள்ளையாண்டான் இறந்துபோய் விட்டதாக இன்னொரு தந்திவந்தது. இந்த சமயத்தில் அந்த வீட்டில் என்னமாயிருந்திருக்கும் என்று இதை வாசிக்கும் நீங்களே யோசியுங்கள்.

"மன்றங்கரங்கமணப்பறையாயின,
அன்றவர்க்காங்கேபிணப்பறையாய்,
நின்றுஒளித்தலுமுண்டாம்;'

என்று பெரியோர் கூறியது பொய்யா? கொஞ்ச நேரத்துக்குமுன் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருந்த வீடு துக்கமும் அழுகையுமாக ஆயினது. எஜமானன் முதல் வேலைக்காரர் வரையும் வீடு அடங்கலும் ஒரே கூக்குரலும் ஒப்பாரியுமாய்விட்டது. தகப்பனுந் தாயும் வீட்டிலுள்ள எல்லாரும் அழுவதைக்கண்ட ரோசம்மாள் தானும் அழுது கொண்டு தகப்பன் கழுத்தைக் கட்டிக்கொண்டு "ஏனையா அழுகிறீர்கள்" என்று கேட்க, அவர் மகள் கழுத்தைக் கட்டிக்கொண்டு "உன் புருஷன் போய்விட்டான் அம்மா இனி நாங்களென்ன செய்யப்போகிறோம்" என்று புலம்பவும் மகள் அழுகையை நிறுத்திவிட்டு "இதற்காக ஏனையா அழுகிறீர்கள்; எங்கே போயிருக்கிறார், போனவர் வரமாட்டாரா?" என்று கேட்கவும் அவர்

அதிகமாக அழுது "உன் புருஷன் செத்துப்போய்விட்டான் அம்மா இந்த க்கண்ருவியைப் பார்க்கவா நாங்களுன்னை இவ்வளவு அருமையாய் வளர்த்தோம்" என்று சொன்னார். இதற்குள்ளாக முத்துசுவாமிப்பிள்ளையின் மருமகன் இறந்துபோன சங்கதி ஊரெங்கும் பரவவே எல்லாரும் முத்துசுவாமிப்பிள்ளை வீட்டில்வந்து துக்கங்கொண்டாடினார்கள்.

அவர் வீட்டில் எங்கே பார்த்தாலும் அழுகை; எங்கே பார்த்தாலும் கூக்குரல்; எங்கே பார்த்தாலும் ஒப்பாரி, மாரடிப்பு; எங்கே பார்த்தாலும் ஐயோ! ஐயோ! என்கிற சத்தம். அந்த வீட்டில் அன்று உண்டான சத்தமும் கூக்குரலும் ஆகாயமுகட்டை ஊடுருவி வானமட்டுஞ்சென்று கடவுளுடைய சன்னிதானம் எட்டி "ஐயோ தெய்வமே! இந்த ஏழைப்பிள்ளையின் பரிதாபத்தைக் கண்டிரங்காயோ?" என்று மன்றாடினது போலவும், பூமியானது இந்த துக்கத்தை தானே தாங்கமுடியாமல் கிடுகிடுத்தது போலவுமிருந்தது. துக்கவீட்டுக்குவந்தவர்களெல்லாரும் ரோசம்பாளைப்பார்த்து "ஐயோ அம்மா உனக்காயிந்தவிதி ஈஸ்வரன் எண்ணியிருந்தார்?" உன்தலையிலிப்படியும் யெழுதியிருந்தாரா" "பச்சைப்புல்லை நோகமிதிக்கமாட்டாயே" என்று பலவிதமாய்ச் சொல்லி அழுதார்கள். இதெல்லாம் ரோசம்மாளுக்கு உபத்திரவமாய்த் தோன்றினாலும், தன்புருஷன் இறந்துபோனான் என்ற துக்கமாவது, தான் அமங்கிலியாயிருந்து யெந்நேரமும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியது வருமே யென்ற யெண்ணமாவது கொஞ்சமுந் தோன்றவில்லை. விளைவு அறியா அப்பாலகிக்கு இனிச்சோளவந்தானுக்குப் போகவேண்டிய உபத்திரவமில்லை என்கிற சந்தோஷமட்டும் அவள் உள்ளத்திலிருந்தது. அவள் புருஷன் இறந்த நிமிஷ முதல் அவளுக்கும் அவள் புருஷனுக்குமுள்ள சம்பந்தக்கட்டு விட்டுப்போனபோதிலும், சிறு பிள்ளையாயிருந்தபடியால் அவள் தாலியை யாவது மற்ற நகைகளையாவது கழற்றவில்லை. ஆனால் மங்கிலியங்கிடந்தும் பிரயோசனமென்ன? ரோசம்மாள் அமங்கிலிதான். அவள் புஷ்பவதியாக இன்னம் 4-5 வருஷந்தான் இடையிலுள்ளது. அப்போது அவள் குடும்பத்தைச் சேர்ந்த சில விதவைகள் கூடி அவளைப்படாதபாடு ப்டுத்தி உரலில் உட்காரவைத்து மங்கிலியத்தை அறுத்து அவள் உடம்பு நிரம்பப் போட்டிருக்கும் நகைகளைக் கழற்றி அழகான மெல்லிய பட்டுப்புடவையை உரிந்து அதற்குப்பதில் முரட்டு வெள்ளைச்சேலைகட்டுவித்து, சில வேளை தலையையும் மழுங்கச் சிரைத்து, ஒரு வேளைச் சாதங்கொடுத்து அநேகதுன்பங்களுக்காளாக்குவார்கள்.

ஐயோ நமது தேசத்தில் கைம்பெண்கள் படுங் கஷ்டங்களையும் அவர்களைப் படுத்தும் நிஷ்டூரங்களையும் நினைக்கையில் குடலைப்பிடு

ங்கிப்போடுவது போலிருக்கிறது. பம்பாய், பூனா, மைசூர் முதலிய இடங்களில் நடக்கும் கொள்ளை நோயைக் கடவுள் நம் தேசத்து ஸ்திரீகளுக்காக வைத்து அமங்கிலிகளைக் கொண்டுபோகக் கட்டளையிடாராவென்று சில வேளைகளில் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. ஜீவகாலமுழுதுங் கஷ்டப்படுவதைவிட இக்கொள்ளைநோய் ஒரே நாளில் அவர்கள் துன்பங்களையெல்லாம் முடித்துவிடுமே. பூர்வகாலப்பெண்கள் தங்கள் புருஷருடன் உடன் கட்டையேறி உயிரைமாய்த்துக்கொண்டது இக்கொடுமைகளையெண்ணிப்போலும். அநேக விதவைகள் இத்துன்பங்களையும் கஷ்டங்களையும் ஜீவகாலமுழுவதும் அனுபவிப்பதைவிட மரணமே நல்லதென்று கருதி கிணறுகளில், ஆறுகளில், குளங்களில்போய் விழுந்துவிடுவதாகச் சிலர் சொல்லக் கேள்வி. இப்பொழுது அவர்கள் இப்படிச் செய்கிறதில்லை. ஆனால் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இத்துடன் இவர்கள் கல்விகற்று சிறுமிகளுக்கு கல்வி கற்பிப்பது நலம். மேலும் ஈஸ்வரபக்தி, பெரியவர்களிடத்தில் மரியாதை, பூப்போடுதல் முதலியவைகளையும் அவர்களுக்குப் போதிக்கலாம்.

ஓர் மாது.

கமலாக்ஷி, சந்திரமுகி சம்பாஷணையின் 106-வது பக்கத்தொடர்ச்சி.

மோகனாங்கியும் அவரைப்பின் தொடர்ந்தாளாயினும், கமலம், மோகனாங்கியும் நானும் அதிவாலிபச் சிநேகிதர்களாகையால் அவர்களுடைய அபிமானத்தையும் கௌரவத்தையும் அண்டை அயலார் அவளைப்புகழ்வதையும் என்னென்றெடுத்துரைப்பேன். இப்படி யவர்கள் வீடு சென்றபிறகு நாங்களும் மெத்தகளைத்திருந்தபடியால் படுத்து நித்திரைபோயினோம். மறுநாட் காலையிலெழுந்து இரண்டு கோவேறு கழுதைகள் பூட்டுகிற ஓர் டாங்காவண்டி நாள் ஒன்றுக்கு வாடகை ரூபாய் மூன்றெனத் தீர்மானஞ்செய்து கொண்டு சுமார் 10-மணிக்குள் எங்கள் பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டு நாங்கள் இவ்விடங்களிற் பார்க்கவேண்டிய இடங்களில் முக்கியமான இடமாகச் சொல்லப்பட்ட கோல்கொண்டாவென்ற இடத்திற்குச் சென்றோம். அது ஸெகந்திராபாத்துக்குத் தென் மேற்காகச் சுமார் 6-மைல் தூரத்திலிருக்கின்றது. போகும் வழியில் நமது சென்னைக்கடலோரத்தில் நித்தியமாய் நம்மவர்களும் ஆங்கிலேயர்களும் சென்று சுத்தமான காற்று வாங்குவதற்கென்று விமரிசை

யாய் ஒழுங்கு படுத்தியிருப்பதைப்போல அவ்விடத்தில் ஹுஸேன்ஸாகரம் என்று சொல்லப்படும் விசாலமான ஓர் ஏரியின் கரையைவெகு வுன்னதமாய்க்கட்டி ஓர் பக்கம் புஷ்பச்செடிகளும் மற்றும் அலங்காரமாயமைத்து மற்றோர் பக்கத்தில் உல்லாசமாய் நடந்துபோகக்கூடிய நடைபாதையொன்றும் ஏற்படுத்தியிருந்ததைப் பார்க்க வெகு நேத்திரானந்தமாயிருந்ததுடன் சற்று நல்ல ஸ்திதியிலிருந்துவரும் செகந்திராபாத், ஐதராபாத்திலுள்ள அநேக ஜனங்கள் மாலை வேளையில் அவ்விடம் வந்து கூடுகிறார்களெனக் கேட்டு இந்த இடம் அதற்கும் தக்கதென்றே மனதிற்கொண்டோம். இதைக்கடந்து தென்புறம் போகையில் இதன் கரையோரமாய் அநேக லக்ஷம் ரூபாய் செலவு செய்து நிஜாம் சிலகாலங்களில் தங்கியிருக்கவென்று கோஷா ஸ்திரீகளும் வஸிக்கத்தக்கபடி ஓர் அரண்மனை அமைத்துள்ளதில் நல்லவேளைபார்த்து நிஜாம் பிரவேசிக்க வருகையில் பூனை குறுக்கிட்டதினால் இதனைப்பாழாய்விட்டிருக்கிறார்களெனக்கேட்டு அந்த இடத்தின் ஸ்திதியையும் அந்தவரண்மனை கட்டப்பட்டிருக்கும் சிற்பத்திறமையையும் ஒருவாறு கண்ணுற்றுக் களிப்பும், விஸனமுமடைந்தோம். இதைத் தாண்டி ஒரு மைல் தூரம் செல்லுமளவும் இருபக்கமும் வரிசை வரிசையாய் பார்ஸி, ஆங்கிலேய, இந்திய, மகம்மதியப் பிரபுக்களின் பங்களாக்களும் இடையிடையே வெகு நேர்த்தியான ரோட்டுகளும் எங்கு சென்றாலும் தண்ணீர்க்குழாய்களுமாயிருந்தன. இவையுங்கடந்து சற்று தூரம் செல்ல இருபுறங்களிலும் விசாலமான மைதானங்களும் எங்களுக்கெதிரில் மிகவுயர்ந்த ஓர் மலையும் அதின் மத்தியிலும் சிகரத்திலும் அநேகம் கட்டிடங்களும் காணப்பட்டன. அவை யென்னென்று நம் மோகனாங்கியின் புருஷரைக்கேட்க அதுதான் மகா புண்ணியசீலராய் உலகெங்கும் புகழ்படைத்த தர்மாவதாரம் ராமதாஸ் ஸ்வாமியைச் சிறையிட்டிருந்த கோல்கொண்டாவென்று சொல்லக்கேட்டு மிகக்களிப்புற்று அச்சிறையில் பக்தியிற் சிறந்த புண்ணியவானுக்குப் பகவான் ஸ்ரீராமசந்திர மூர்த்தி இளையபெருமாளாகிய லக்ஷ்மணர், ஆபத்துக்காத்தோனும் அனுமார், இவர்களுடன் வந்து பிரத்தியக்ஷமாகி இவர்சிறையையும் ஒழித்துப் பாதுஷாவாகிய நிஜாம் தான் மூடத்தன்மையால் பக்தரை நன்றாய்த் தெரிந்துகொள்ளாது அபராதியாகவெண்ணிச் சிறையிலிட்டதைப்பற்றி விசனித்து ராமதாஸ் ஸ்வாமியின் காலில் விழும்படி செய்தாரெனக் கேட்டு அவ்விடங்களைப்பார்த்து ஆவலாய் வெகு குதூகலத்துடன் எங்கள் வண்டியை அவ்விடத்துக்கு வேகத்திற் செலுத்திக்கொண்டு சென்றோம்.

V. A. G.

குடும்பசம்ரக்ஷணை.

முன்தொடர்ச்சி.

முகவுரை.

எந்தெந்த தொழில்களில் பயின்று எவ்வளவு பொருளைச் சம்பாதித்தாலும் யாவரும் அப்பொருளால் சுகமாக வாழ்வதற்காகவே யோசிப்பார்கள். ஒருவன் வேறுதொழிலில் எவ்வளவு சமர்த்தனானாலும், குடும்பசம்ரக்ஷணையில் வேண்டியவைகளை சரிவரநடத்த சக்தியில்லாவிட்டால் அவனை குடும்பஸ்த னென்று சொல்வோமா? ஆகையால் இல்வாழ்க்கையின் தருமங்களை அநுசரித்தல் யாவருக்கும் முக்கியமானது. எந்த தொழிலுக்காகிலும் சுய அனுபவமும், புத்தியும் இருக்கவேண்டு மென்றும், சாஸ்திர அறிவும் அவசியமாயிருக்கவேண்டுமென்றும் மேலேசொல்லியிருக்கிறோம். ஆகையால், குடும்ப விஷயங்களை சரிவர நடத்துவதற்கும், தொழிலுக்கும் சாஸ்திர விசாரணை இருக்கவேண்டியது. இதற்குத்தான் "குடும்பசம்ரக்ஷணை" சாஸ்திரமென்று பெயர். இந்த சாஸ்திரத்தில் சொல்லியபடி நாம் சொற்பபொருளை செலவு செய்வதனால் விசேஷ லாபத்தையும், சௌக்கியத்தையும் எப்படி யடையக்கூடும் என்பதை தெரிந்துகொள்ளலாம். குடும்பநிர்வாகம் என்னும் அற்பவிஷயத்திற்கு தன்னுடைய அநுபவமே ஒரு குடும்பஸ்தனுக்குப் போதாதா வென்றும், இதற்காக பெரிய சாஸ்திரங்களும் வித்தையும் வேண்டுமாவென்றும் எவராவது ஆட்சேபிக்கலாம். இப்படி ஆட்சேபிக்கும் அற்பவாதத்திற்கு நாம் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறோம். வேறு சாஸ்திரங்களைக் கற்கா விடினும், வீட்டில் அளவுக்குமிஞ்சி அதிகமாக செலவு செய்யக் கூடாதென்றும், தேவையான வஸ்துக்களை வேண்டியும், தேவையில்லாத வஸ்துக்களை வாங்காமலும் இருப்பது வீட்டிற்குரிய எஜமானி தெரிந்து நடக்கவேண்டிய காரியமாயிருக்கிறது. நமது குடும்பங்களில் குடும்ப சம்ரக்ஷணையைக் குறித்து, சாதாரணமாய்விட்டு எஜமானிகளுக்கு அவ்வளவு நல்ல ஏற்பாடுகள் இல்லாததினால் அவசியமான சௌக்கியத்தையும், லாபத்தையும் அடைவதற்குப்பதிலாக கஷ்டங்களும் பொருள் நஷ்டமும் உண்டாகின்றன. அதனால் குடும்பத்திலுள்ள யாவருக்கும் "சமுசாரம் சாகரம்துக்கம்" என்றபடி சமுசாரத்தில் சுகமில்லையென்று வெறுப்படைந்து † இல்லறத்திலும் * துறவறமே ஆயிரமடங்கு மேலான

† இல்லறமென்பது நன்மனையாளோடு கூடி வீட்டில் இருப்பது.

* துறவறமென்பது உலக இன்பத்தை வெறுத்து மோட்சத்துக்காக தனியாயிருந்து கடவுளை தியானித்தல்.

தென்று துறவறத்தை விரும்பத்தக்க அவசியம் அநேகருக்கு உண்டாகிறது. தக்க ஏற்பாடுகளுடன் குடும்பத்தை ஒருவன் நடத்தி வருவானுனால் அக்குடும்பத்தில் உள்ள அவனுக்கும் மற்ற யாவருக்கும் சுகமே உண்டாகலாம். அப்பேர்ப்பட்ட ஏற்பாடு ஒன்றும் இல்லாமல் ஒருவன் ஒரு குடும்பத்தை நடத்திவருவானுனால் அக்குடும்பத்திலுள்ள அவனுக்கும் மற்ற யாவருக்கும் கஷ்டமே உண்டாகும். இந்த விஷயத்திற்கு உதாரணமாகக்காண்பிக்க இதனடியில் இரண்டு குடும்பங்களின் விருத்தியையும், விருத்தியில்லாமையையும், சௌக்கியா சௌக்கியங்களையும் ஒப்பிட்டு தெரிவிக்கிறோம்.

முதலாவது ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் குடும்பத்தைக்குறித்துச்சொல்வோம். இவருடைய வீட்டிலுள்ளவர்கள் சிலரா யிருந்தபோதிலும் ஒரு பெரிய பங்களாவில் வசித்துக்கொண்டிருந்தார்கள். இந்த பங்களாவின் தோட்டத்தில் பெரும்பாகம் புல் முளைத்த ஒரு பெருங்காடுபோலிருந்தது. மீதியுள்ள பாகத்தில் உலர்ந்து வருகிற ஒரு ரோஜா செடியும், வாடிக்கொண்டிருக்கிற ஒரு மல்லிகைப்பூச் செடியும் இருந்தன. கிணற்றோரத்திலிருக்கின்ற ஒரு வாழைப்புதரில் ஜலம் அதிகமாக தங்குவதினுல் துர் நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. இதைச்சேர்ந்த புதரிலேயே ஜலம் தங்காத பாகத்தில் ஜலமில்லாததனுல் மரங்கள் உலர்ந்து போயிருந்தன. கிணற்றினருகில் எப்போதும் ஜலம் தங்கிக்கொண்டிருந்ததனுல் சேறுகி கால் வைக்க இடம் இல்லாமலே யிருந்தது.

இனி வீட்டிலுள்ளவர்களைக் குறித்தும், வீட்டின் உள்பாகத்தின் லக்ஷணங்களைக்குறித்தும் சொல்வோம். நன்றுய்க் காற்றுவீசும்படியான முன் தாழ் வாரத்தில் உதவியற்ற துடைப்பங்களும், கிழிந்துபோன குடைகளும், தீபஸ்தம்பங்களும் வைக்கப்பட்டிருந்தன. கூடத்து அறைகளில் அழுக்குப் படிந்ததும் கிழிந்த நாடாவினுல் பின்னப்பட்டகட்டில்களும், கால்களும் கைகளுமில்லாததும் அறுந்துபோன பிரம்புநாருமுள்ள நாற்காலிகளும் போட்டு பூட்டப்பட்டிருந்தன. இவைகளல்லாமல் படுக்கையறையொன்றும், சமையல் அறையொன்றும், இன்னொருஅறையும் இருந்தன. இந்த மூன்றுவது அறை விசாலமாயும், சுண்ணும்பு பூசியதாயும் இருந்தமையால் இது வீட்டின் தலைவர் கச்சேரிசெய்யுமிடமாயிருந்தது. இதில் அதிக வெளிச்ச மில்லாதிருந்ததனுல் அந்த அறையின் மேற்கூரையில் வெளிச்சத்திற்காக கண்ணுடியொன்று வைக்கப்பட்டிருந்தது. காற்றென்பது இறிதும் கிடையாது. அந்த அறையில் போடப்பட்டிருந்த பங்காவை இழுக்கும்படி இரண்டு வேலைக்காரர்களை நியமித்திருந்தார். இவர்களை எப்போதும் பங்காவை இழுக்கும் இடத்திலேயே இருக்கும்படி கண்டிப்பான

உத்தரவு செய்திருந்தும், அவர்களில் ஒருவனும் அவ்விடத்தில் இருப்பதே கிடையாது. சமையல் அறையின் ஒரு மூலையிலிருந்து கொண்டு ஸ்தூல சரீரத்தையுடைய ஒருவன் நெய், அரிசி, கறிகாய் முதலிய சாமான்களை கொடுஅம்மா, கொடுஅம்மாவென்று கத்திக்கொண்டு இருந்தான். இவன் தான் சமையற்காரனுய் காணப்பட்டது. வீட்டின் எஜமானிக்கு அஜீரணமேலிட்டிருந்ததனால் மேற்சொன்ன அழுக்குப்படிந்த ஒரு கட்டிலின் மேல் படுத்துக்கொண்டு சோம்பேறித்தனத்தால் வேலையில் வெறுப்புக் கொண்டு படுத்திருந்தபடியே அடே சேஷா சேஷா வென்று கூப்பிட ஒரு வேலைக்காரன் உடனே வந்தேன் வந்தேன் என்று சொல்லிக்கொண்டு எஜமானியிடத்தில் வந்து வணங்கி நின்றான்.

உடனே அவனை உக்கிராண அறைக்குப்போய் வழக்கப்பிரகாரம் அரிசி, பருப்பு, உப்பு, புளி, நெய், காய்கறி, விறகு முதலிய சாமான்களை எடுத்து சமையற்காரனிடம் கொடுக்கும்படி கட்டளையிட்டு தன்கையிலிருந்த சாவியைவிட்டெறிந்தாள். அவன் உடனே பண்டகசாலைக்குட்போய் எல்லாசாமான்களையும் எடுத்துக்கொடுத்தானபிறகு பங்காவிழுக்கும் தன் வேலையைவிட்டுவிட்டு தோட்டத்திற்குட் சென்று அவ்விடத்தில் சமையற்காரன் அரிசி கூடையைப்பிடித்துக்கொண்டு சமையல் பாத்திரங்களைச் சுத்திசெய்யும்பொன்னியிடம் பேசிக்கொண்டிருப்பதைக்கண்டு தன் பங்கு அரிசியையும் கூட இரகசியமாக விற்றுவரும்படி அவளிடம் உத்தரவுசெய்தான்.

ஆ! ஆ! தெரிந்தது! உக்கிராணத்திலிருந்து அதிகமாய் வாங்கி வந்த பண்டங்கள் இவர்களுக்குரியதுபோலும்! படுக்கை முதலானவைகளை சுத்தம் செய்ய ஏற்படுத்தியுள்ள ஒரு வேலைக்காரப்பையன் மற்ற வேலைக்காரர்களோடு பரிகாசஞ்செய்து விளையாடிக் கொண்டிருந்தான். எஜமானன் தரித்துக்கொண்டிருக்கும் உடுப்புகளில் மூட்டுப்பூச்சிகள் நிறைந்து தன்னைக் கடித்துக்கொண்டிருந்தமையால் அவருக்கு வேலைசெய்யத் தோன்றாமல் தான் எழுதிக்கொண்டிருந்த காகிதங்களையும், பேனாவையும் வைத்துவிட்டு கோபத்துடன் தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டும் ஒருவனும் அவரை லட்சியம்செய்து வரவேயில்லை.

சில நாட்களுக்கு முந்திவாங்கியிருந்த அத்தர் புட்டிகள் படுக்கையறையிலுள்ள அலமாரியிலிருந்தன. சுவர்நிறைய தூசிகள்நிறைந்திருந்தமையால், தொங்க விடுவதற்கு கூடாமல் புதிதாய் சித்திரசாலையிலிருந்து வரவழைக்கப்பட்டபடங்கள் தூசியால் நிறைந்த அந்த அலமாரியிலேயே வைக்கப்பட்டிருந்தன. சூரிய கிரணம் ஒரு இருட்டுள்ள அறையின் மேற்கூரையிலுள்ள ஒரு துவாரத்தின் வழியாய்ப்பிரவேசித்து வெள்ளித் தடியைப்போல் ஒளி வீசிக்

கொண்டிருந்தது. அச்சூரிய வொளியில் பறந்து கண்ணுக்குத் தெரியும் கறுப்பு அணுத்தூசிகள் ஆ! ஆ! எங்களை இந்த அறையிலிருந்து வெளிப்படுத்தும் சக்தியையுடைய வேலைக்காரர் இவ்வீட்டிலில்லாமலிருந்தும் நீயா எங்களுடைய இரகசியத்தை வெளிப்படுத்த சாமர்த்தியமுடையதாயிருக்கிறாயாவென்று அவ்வொளியைப் பரிகாசம் செய்வனபோல அதன் மத்தியில் பறந்துகொண்டிருந்தன.

அந்த வீட்டு எஜமானிக்கு தலைவலிவரவர அதிகப்படவே † லாவண்டருடைய வாசனையை முகர்ந்தால் அது நீங்குமென சேவகன் காசிம் சாயப்பு சொன்னபோது அந்த லாவண்டர் திராவகம் வாங்கி வீட்டில் வைத்திருந்தால் எப்போதாவதுஉபயோகப்படுமென்று எண்ணி சேவகனிடம் ஒரு ரூபாயைக்கொடுத்து அந்த திராவகத்தை வாங்கி வரும்படி அனுப்பினாள்.

இந்த குடும்பத்தாருடைய குறைவுகள் இன்னதென்று நாம் எடுத்துச் சொல்லவேண்டியது அவசியமில்லை. அதாவது இவர்களுக்கு இவ்வளவு பெரிய வீடுவேண்டியதில்லை யென்றும், வீடுவேண்டுமானாலும், அத்தனை வேலைக்காரர்கள் வேண்டியது அவசியமில்லையென்றும், வீடுமுழுவதும் நன்றாய்ப் பெருக்கி சுத்திசெய்ய வேண்டுமென்றும், வஸ்திரங்களை நன்றாய்த்தோய்த்து அழுக்கில்லாமல் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், காற்றுவீசும்படியான நல்ல அறையில் வீட்டு எஜமானன் கச்சேரி செய்துவர வேண்டுமென்றும், குடும்பத்தில்புருஷனும் பெண்சாதியுந் தவிர வேறு மனிதரில்லாமையால்வீட்டுக்குடையவளே சமையல் முதலிய வேலைகளைச்செய்யக்கூடுமென்றும், அந்தம்மாளே சமையல் முதலிய வேலைகளைச் செய்துவந்தால் அஜீரணமுதலான நோய்கள் உண்டாகாமலிருக்கு மென்றும் இதை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் நன்றாய்த் தெரியவரும்.

ஸி. எஸ். இ.

இன்னும் வரும்.

Tit-Bits.

ஓர் வேடிக்கைகதை.

இராமன் என்னும் 18 வயதுள்ள ஒருவன் போலீஸ் டிப்பார்ட்மெண்டில் ஒருவேலைவேணுமென்று அநேக காலமாகப் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டுகொண்டுவந்தான். தினம் வந்து உபத்திரவப் படுத்தினதி

---

† லாவண்டர் என்பது ஒரு வாசனையுள்ள திராவகம்.

னால் இன்ஸ்பெக்டருக்கு இராமன்மேல் வெறுப்பு வந்துவிட்டது. ஒரு நாள் இராமன் இன்ஸ்பெக்டரைப் பார்க்கப்போனபோது, அவனை அங்கே நிற்கவேண்டாமென்றும், வெளியிலே போகும்படியாயும் உத்தரவுசெய்ய, அவன் போகவில்லை. அதினால் இன்ஸ்பெக்டருக்கு கோபமதிகரித்துப் பக்கத்திலிருந்த ஒரு கான்ஸ்டேபிலைப் பார்த்து "அவனை வெளியிலே பிடித்துத்தள்ளு" என்றார். அதைக் கேட்டவுடன் இராமன் வேகமாய்ப்போய்க் கான்ஸ்டேபிலின் கழுத்தைப்பிடித்து ஒரே தள்ளாய்த்தள்ளி இன்ஸ்பெக்டரிடத்தில்போய் "நீங்கள் சொன்ன வேலையையுடனே செய்துவிட்டேன். இனியென்ன செய்யவேணும்" என்றான். அப்படியிருக்கக் கீழேவிழுந்த கான்ஸ்டேபிலின் தலைப்பாகை ஒரு பக்கத்தில் காணப்பட்டது; அவன் மற்றொருபக்கத்தில் காணப்பட்டான். தவிர கீழேவிழுந்ததினால் அவன் தலையில் காயம்பட்டது. அதைப்பார்த்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இராமன் செய்கையைப்பற்றிப் புகழ்ந்து சிரித்துக்கொண்டு அவனுக்கு இருபது ரூபாயில் ஒரு வேலைகொடுத்து "உன்னைப்போல தைரியசாலியும் சுறுசுறுப்புள்ளவனையும் நான் இதுவரையில் கண்டதில்லை" என்று சொல்லியனுப்பினார்.

வி. கோ.

NEWS & NOTES.

உலகத்தில் ஜனிக்கிற 10 லக்ஷம் ஜனங்களில் 60 பேர் குருடர்களாக ஜனிப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஒரு பொழுதும் குலைக்காத நாய்கள் ஆஸ்திரேலியா ஈஜிப்ட், திபேத் என்ற மூன்று தேசங்களிலிருக்கின்றன.

ஜெப்பான் தேசத்தின் சமுத்திரகரையிலிருந்து 30 மைலுக்கு அப்பால் சமுத்திரத்தின் ஆழம் 4,643 பாதம் (Fatham) என கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்திலிருந்து ஒரு வித்வான் காசியில் ஸ்தாபித்திருக்கிற இந்து காலேஜிக்கு உபாத்தியாயராக் வரப்போகிறார். இவருக்கு சம்பளம் கிடையாதாம். தர்மத்திற்காக உழைப்பாராம்.

நியூகிரேநடா என்ற விடத்தில் ஓர் வித ஆச்சரியமான செடியிருக்கிறது. இந்தச் செடியின் இலைகளைப்பிழிந்து ரசத்தை மையாக எழுத உபயோகிக்கலாம். எழுதும்போது இதன் வர்ணம் சிவப்பாக விருக்கும். ஆனால் சில நேரம்சென்றபின் கறுப்பாக மாறிவிடுமாம்.

இப்பூமியில் சில விடங்களில் மழைபெய்வதே கிடையாது, அவைகள் ஆபிரிகாவிலுள்ள சஹாரா என்ற வனாந்தரமும் அரேபியா, சிரியா, பிரஷியா, திபேத், மங்கோலியா முதலியவைகளாம். இன்னும் தென் அமெரிக்காவிலுள்ள சிலபாகங்களிலும் மழைபெய்வது கிடையாதாம்.

விஜயநகரம் மகாராணியாரவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார். 12வ செவ்வாய்க்கிழமையன்று இவர் நமது கவர்னரவர்களின் ஸம்சாரமாகிய லேடி ஹாவ்லாக்கைப்பார்க்கச் சென்றார். ஒருமணிநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். ராஜபுத்திர மகாராணிகளில் விஜயநகரம் மகாராணியார் முதல் முதல் இவ்விதம் சென்று நமது லேடி ஹாவ்லக்குடன் பேச முயன்றவர். உயர்ந்த பதவியிலிருக்கும் பாக்கியவதிகள் இவ்விதம் தக்க கௌரவம் வகித்த ஆங்கிலேய மாதுகளுடன் கலந்து பேசுவது நலமேயாம்.

பிலிப்பையின் தீவுகளில் சில விநோதமான பட்சிகளிருக்கின்றனவாம். அவைகளில் பெண்பட்சிகள் இவ்விடத்திலுள்ள பட்சிகளைப்போலல்லாமல் ஒரே முட்டையை இடுமாம். அப்பொழுது ஆண்பட்சி ஒரு பெரிய மரத்தில் ஒரு துவாரத்தைச் செய்து பெண்பட்சிக்குக் கொடுக்கும். பெண்பட்சி அதின் உள்ளேசென்றவுடன் ஆண்பட்சி வெளியிலுள்ள துவாரத்தை மிக சிறியதாக செய்து விடுமாம். இந்த சிறிய துவாரத்தின் வழியாகத்தான் ஆண்பட்சி பெண்பட்சிக்கு ஆகாரம் கொடுத்து வரும். முட்டையிலிருந்து குஞ்சு வெளிக்கிளம்பினபின் தாய்பட்சியும் குஞ்சுடன் வெளியில்வந்து விடுமாம். இதற்கு காரணமென்னவெனில் அத்தேசத்தில் பாம்புகள் அதிகமிருக்கின்றமையால் பெண்பட்சியையும், குஞ்சையும் விழுங்காமலிருப்பதற்காகவாம்.

---

* நகைபைத்தியம் :—பெண்கள் முக்கியமாய் நகைக்கு ஆசைப்படுகிறார்கள். இதில் தம் புருஷர்களுக்கு செலவே தவிர வேறு இல்லை. நகை போட்டுக்கொள்வதால் திருடர் பயமுண்டு. அங்க பயமுண்டு. நகைகள் தேகத்திற்கு ஒரு அழகென்று நான் நினைக்கவில்லை. கணவனை சந்தோஷிக்கச் செய்வதே அழகு. ஸ்திரீகள்மட்டும்நகைப்பைத்தியத்தைஒழித்துவிட்டு கல்வியாகிய நகையைதரிக்கப் புகுந்தால் இந்த தேசத்தைப் பிடித்த மூடத்தனம் நீங்கும். முக்கியமாய் சிறு குழந்தைகளுக்கு நகைபோடுவதால் நகை திருட்டுப்போவது மன்னியில் உயிர்ச்சேதமும் நேரிடுகிறது. ஆகையால் இதன்மேல் ஆசைப் படலாகாது.

---

* ஓய்வுகாலம் :—படிக்கத் தெரியாதமாதர்கள் தங்கள் தங்கள் புருஷர்கள் கச்சேரிக்கோ, கடைக்கோ, வேலைக்கோ போனவுடன் தங்கள் காலத்தை கழிக்கும்விதம் என்னவெனில் அடுத்த வீட்டிற்கு போய் வீண் வம்புகள் பேசுதல் மாமியார், நாத்திகள்மேல் புகார் சொல்லுதல், சண்டை போடுதல் முதலியவைகளே. படிக்கத் தெரிந்தவர்களோ சதை வாசித்தல் பத்திரிகை படித்தல், கணக்கு, தையல், பூப்போடல்முதலிய வேலைகளில் தங்கள் ஓய்வு காலத்தை செலவழிக்கிறார்கள். இதைப் பார்த்து சிலர் ஏளனம்செய்கிறார்கள். அது அவர்களுடைய அறியாமையே. தேனின் ருசி அதை குடித்தவர்களுக்கே தெரியும். மாதர்களே! செம்மையாய் படித்து அறிவில தேறுங்கள்.

* பவானி அம்மாள்.